

Thirukoshtiyur Sowmynarayana perumal with Thayars







# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 1 இதழ் 37 10.09.2025

**ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:**



# உள்ளே....

## படித்து பின்பற்ற வேண்டிய
## முத்துக்கள்
## உபதேசங்கள்





# முத்துக்கள்

1. உலகம் என்பது ஒரு விஷ மரம். இந்த விஷ மரத்தில் அமுதம் போன்று மிகவும் சுவையான இரண்டு கனிகள் காய்க்கின்றன. அக்கனிகள் ஏதோ ஒரு சமயம் உண்டாகின்றன. அவற்றுள் ஒன்று பகவத் பக்தி, மற்றொன்று தொண்டர் (அடியார்) பக்தி. இவ்விரண்டினுள் தொண்டர் பக்தியே மிகவும் சுவையானது. அதுவே ஏற்கத் தகுந்தது என்று சொல்லப்பட்டுள்ளது. 'ஸம்ஸார விஷ விருட்சஸ்ய த்வே பலேஹ்யம்ருதோபமே கதாசித் கேசவே பக்தி; தத் பக்தைர்வா ஸமாகாம;'

*********************** ****************************

2. ஆழ்வார்களுள் நம்மாழ்வார் 'பயிலும் சுடரொளி' 'நெடுமாற்கடிமை' என்னும் இரண்டு திருவாய்மொழிகளில் பகவானுடைய அடியார்களுக்கு அடிமையாயிருப்பது மிகவும் இனிமையானது என்று குறிப்பிட்டார். தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார் அடியார்க்கு அடியனாய் இருந்தார்கள். 'அடியார்க்கு என்னை ஆட்படுத்தாய்' என்று தொண்டரடிப் பொடிகளும், 'அடியார்க்கு என்னை ஆட்படுத்த விமலன்' என்று திருப்பாணாழ்வாரும் அருளிச் செய்த பாடல்களால் உணரலாம்... இவ்வனைவரிலும் அடியார் பக்தியில் மிகச் சிறந்து விளங்கிய மதுரகவி ஆழ்வார், நம்மாழ்வாரைத் தவிர வேறு தெய்வத்தை அறியேன் என்று இருந்தார். 'தேவு மற்றறியேன்' என்பது அவர் பாடல். இவ்வாறே ஆசார்யர்களுள், ஸ்ரீராமாநுஜரிடம் கூரத்தாழ்வான், முதலியாண்டான் எம்பார், ஸ்ரீ அருளாளப் பெருமாளெம் பெருமானார், வடுக நம்பி முதலான மஹான்கள் எல்லாரும் ஈடுபட்டிருந்தனர்.

*****************************************************

3. ஆகவே தான் ஸ்ரீ வைஷ்ணவ சம்ப்ரதாயத்தில் அடியார்களை பூஜிப்பதும் அவர்களுக்கு உணவு முதலிய கொடுத்து உபசரிப்பதும் தொன்று தொட்டு நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு தொண்டர்களை பூஜிப்பதை ததீயாராதனை என்று சொல்லப்படுகிறது. தத் என்றால் பகவான், ததீயர் என்றால் அவன் அடியார்கள், ஆராதனை என்றால் அவர்களை பூஜிப்பது. பூஜிக்கும் விஷயத்தில் விஷ்ணு தேவதையை பூஜிப்பது சிறந்தது. அதிலும் மேம்பட்டதாகக் கூறப்படுவது அவனடியார்களை பூஜிப்பதாகும் என்ற கருத்தை

"ஆராதனானாம் ஸர்வேஸாம் விஷ்ணோரராராதனம் பரம் தஸ்மாத் பரதரம் ப்ரோக்தம் ததீயாராதனம் பரம்"
என்னும் சுலோகத்தில் காணலாம்.
****************************************************

4. விஷ்ணு சித்தரும், ப்ரும்மாவின் அருளால், ராமாயணம் முழுவதையும் காணப் பெற்ற வால்மீகி முனிவனைப் போலவும், சங்கத்தின் நுனியால் தொடப் பெற்ற துருவன் கடல் மடை திறந்தது போல எம் பெருமானைத் துதிக்கலுற்றாற் போலவும், தான் குருமுகமாக ஓதியவேத வாக்கியங்களை மாத்திரமல்லாமல், குருமுகமாக ஓதாதவையாய், தேவலோகம் முதலான உலகங்களில் நடையாடுபவையான, அளவற்ற வேதவாக்கியங்களையும் ஸ்ம்ருதி, இதிஹாசம், புராணம் முதலானவைகளையும் கொண்டு எதிரிட்ட வித்வான்கள், தாங்களே இசைந்து தீரும்படி, ஶ்ரீமந் நாராயணனே பரம்பொருள் என்று நிர்ணயம் செய்தார். வெற்றி கொள்பவருக்குப் பரிசாக, கல்தோரணத்தில் கட்டப்பட்டிருந்த பொற்கிழி, இவர் முன்னே, தானே தாழ வளைந்து வந்தது. ஆழ்வாரும், எம்பெருமானுடைய கருணையை உகந்து அந்தப் பொற்கிழியை அறுத்துக் கொண்டருளினார். இதைக் கண்ட வித்வான்களும், அரசனும் மற்றவர்களும் பெருவியப்புற்று இவர் திருவடிகளில் பணிந்து வணங்கினர்.
****************************************************

5. "பவித்ரானாம் பவித்ரம்" என்று சொல்லப்பட்ட எம்பெருமானுக்குப் பொருத்தமான தம் பிறவி வேண்டும் என்று ஶ்ரீ ஆண்டாள் அயோநிஜையாய் அவதரித்தாள். ஶ்ரீ ஆண்டாளின் திருமேனியை த்யானிப்பவர் யாருக்கும் ஸ்ரவாபீஷ்டஸித்தி என்பதைத் தான் "ஶ்ரீ விஷ்ணு சித்த குல நந்தன கல்பவல்லீம்" என்று ஸ்வாமி தேசிகன் நயமாக அருளிச் செய்தார்.
****************************************************

6. கோதையின் அவதாரத்தினால் தென்திசை ஏற்றம் பெற்றது. கோதையின் ஸம்பந்தத்தால் கோவிந்தன் சிறப்புற்றான். கோதா என்ற நாமம் உள்ளதால் கோதாவரி எல்லாரையும் புனிதமாக்குகிறது.
கோதையின் சூடிக்களைந்த மாலையை பெருமானுக்குச் சென்று சாற்றியதால் விஷ்ணுசித்தர் "பெரிய" ஆழ்வார் என்று பேர் பெற்றார்.
கோதை (பூமாதேவி)யின் சம்பந்தத்தால் தான் வால்மீகி

பூதேவியான் காதான புற்றிலிருந்து) வெளிவந்த வால்மீகி பேசிய ராமாயணம் சிறந்த இதிஹாசமாயிற்று. அநாதிகாலமாக பாபம் செய்பவர்களும் கோதையின் ஸ்ரீ ஸுக்திகளை அனுஸந்தித்தால் பெருமான் அவர்களைத் தன்னடியார்களாக ஆக்கி பூர்ண அனுக்ரஹத்தையும் செய்து விடுகிறான்.

**************************************************

7. கோதையைப் போல் தாம் இயற்கையில் பெண்ணாய் இருந்து பகவானை அனுபவிக்க முடியாமல் போனதை நினைத்து ஆழ்வார்கள் பலர் தாங்கள் கற்பனையிலாவது நாயகி பாவத்தில் கண்ணனை அனுபவிக்க ஆசைப்பட்டனர். கோதை சூடிக் களைந்த அதை பகவான் சூடிய போது ஸர்வோத்தமமான வைஜயந்தீ மாலையை விட உயர்வாக மதித்தான். பகவானும் பிராட்டியும் சேர்ந்து மின்னல் உடைய க்ருஷ்ண மேகம் போல் வர்ஷித்த அம்ருத ப்ரவாஹமே கோதையாம். அந்த அம்ருத நதியில் நீராடினவர்களுக்கு ஸம்ஸாரதாபமே கிடையாது என்று பலபடிகளால் ஸ்ரீ ஆண்டாளை ஸ்தோத்ரம் செய்தருளின ஸ்வாமி தேசிகன், பூமகள் மாதாவான ஸ்ரீ ஆண்டாள் நம்மை ஸ்தன்யபானம் பண்ணும் குழந்தை, தாயின் ஸ்தனத்தைக் கடித்தே நோவு செய்தாலும், தாய் பொறுத்து மகிழ்ந்து பாலூட்டுவது போல் நம் தவறுகளை அநாதரித்து அருள் செய்ய வேண்டும் என்று ப்ரார்த்தித்து ஸ்ரீ ஆண்டாளின் இந்த்ர நீல மணியின் சோபையுடைய திருமேனி, அவள் ஏந்திய செங்கழுநீர் புஷ்பத்தோடும், அளவிறந்த வாத்ஸல்யத்தோடும், சூடிக் களைந்த மாலையால் கவரப்பட்ட செல்வனான தன் பதியோடு என் நெஞ்சில் ஸதா திகழ வேண்டும். பரம கோதா பக்திமான் ஆன ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் அனுபவத்தை ஸ்ரீ கோதாஸ்துதியின் வழியாக நாமும் அனுஸந்தித்தால், பகவான் நம்மை பஹுமானிக்கிறான் என்று பலச்ருதியில் அறிகிறோம்.

8. ***அஷ்டாக்ஷரம், திரு மந்த்ரம், மூலமந்த்ரம், மந்த்ரப்ரஹ்மம், மந்த்ரரத்னம் எனறெல்லாம் அழைக்கப்படும் திருவஷ்டாக்ஷரம் மூன்று பதங்களுடனும், எட்டு எழுத்துக்களுடனும் அமைந்த மந்தரமாகும். இதன் நடுவேயுள்ள நம: என்ற சப்தமானது முதலில் உள்ள ஓம் என்ற ப்ரணவத்துடன் சேர்ந்து ஜீவாத்மஸ்வரூபத்தைச் சொல்லும். தன்னிடத்தே இருந்து ஆவ்ருத்தி பெற்று "நமோ நம:" என்றாகி உபாயத்தை சொல்லும். அதாவது ஜீவாத்மா பரமாத்மாவிடம் செய்யும் மரணாகதியைச்***

*சொல்லும். நாராயணாய என்ற கடைசி பதத்தோடே சேர்ந்து உபேயத்தை சொல்லும். அதாவது ஜீவாத்மா பரமாத்மாவிற்கு கைங்கர்யம் செய்து நற்கதி அடையவேணும் என்று சொல்லும்.*

9. *ஸ்ரீவேதாந்த தேசிகரும் "த்வத் மோக்ஷத்வே ஸ்திரதியம் த்வத் பராப்த்யேக ப்ரயோஜனம்" என்று ந்யாஸதகத்தில் சொன்னபடி பாகவத னேஷத்வமே அஷ்டாக்ஷரத்தின் உண்மையான நிலை என்று ஸாதித்துள்ளார்.*

10. *திருமந்த்ரத்தின் நடுவேயுள்ள நமஸ் என்ற பதம் ஸ்வரூபவிரோதி, உபாயவிரோதி, உபேயமான புருஷார்தத்திற்கு விரோதி என்ற மூன்று விரோதிகளையும் விலக்குகிறது.*

11. *ஸரீரமே ஆத்மா என்ற எண்ணத்தை ப்ரணவத்திலுள்ள "ம" என்ற எழுத்து போக்குகிறது. ஆத்மா ஸ்வதந்த்ரனல்ல என்பதை "அ" என்ற எழுத்து தெரிவிக்கிறது. ஜீவாத்மா மற்றவர் எவருக்கும் சேஷனல்ல என்பதை "உ" என்ற எழுத்து தெரிவிக்கிறது. நாராயண பதமும் அதன் மேலுள்ள நான்காம் வேற்றுமையும் சேர்ந்து பந்துக்களிடம் ஆசை மற்றும் பிற விஷயங்களிலுள்ள ஆசை ஆகியவற்றைக் கழிக்கிறது.*

12. *திருமந்த்ரம் ஸப்த ஸக்தியாலும், அர்த்த ஸக்தியாலும் ஆக இரண்டு வகையிலும் ஜீவாத்மாவை காக்கவல்லது. அஷ்டாக்ஷரத்தை உச்சரித்து ஜப ஹோமங்களைச் செய்தால் ஸப்த ஸக்தியால் பலனளிக்கிறது. பரமாத்வே உபேயன் (அடையத்தக்கவன் அவனே உபாயம் (அடையும் வழி) என்று பற்றினால் அர்த்த ஸக்தியால் ரக்ஷிக்கக்கூடியது.*

**********************************************